## 4. SGSY

### 4.3 2001 - 2002 நிதியாண்டில் 30,000 பெண்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளித்தல்

ஊரக வளர்ச்சி (எஸ்.ஜி.எஸ்.ஒய்) துறை

அரசாணை (நிலை) எண். 8 நாள்.05.03.2002

படிக்க :

1. அரசு ஆணை நிலை எண்.137, ஊரக வளர்ச்சி, நாள்.21.07.1999
2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஊரக வளர்ச்சித்துறை தொடர்பாக 16.07.2001 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்பு
3. அரசுக் கடித எண்.18814/எஸ்.ஜி.எஸ்.ஒய்/2001–1, நாள்.31.05.2001
4. ஊரக வளர்ச்சி இயக்குநர் நேர்முகக் கடித எண்.40584/2001/எஸ்.ஜி.எஸ்.ஒய்.1(1), நாள்.27.06.2001
5. ஊரக வளர்ச்சி இயக்குநர் நேர்முகக் கடித எண்.60998/எஸ்.ஜி.எஸ்.ஒய்.1.3, நாள். 16.08.2001
6. ஊரக வளர்ச்சி இயக்குநர் நேர்முகக் கடிதம் ந.க.எண்.60998/2001/ எஸ்.ஜி.எஸ்.ஒய்.1.3 நாள்.29.11.2001

**ஆணை**

சட்டமன்றப் பேரவையில் 25.05.2001 அன்று மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 16.07.2001 அன்று நடைபெற்ற ஊரக வளர்ச்சித்துறைத் திட்டங்கள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் மற்றும் 2001–2002–ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை ஆகியவற்றில் மகளிருக்கான சுய வேலைவாய்ப்புக்களை பெருக்க ஐந்து இலட்சம் பெண்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கும் ஒரு பெருந்திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது. அவ்வறிவிப்பின் தொடர்ச்சியாக சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறை 2001–2002–ம் ஆண்டில் ஊரக வளர்ச்சித் துறையை பொறுத்த அளவில் 30,000 பெண்களுக்கு சுய வேலைவாய்ப்பு கிடைக்கும் வகைகளில் பயிற்சி அளிக்க வேண்டும் என இலக்கு நிர்ணயித்தது.

2. இதனடிப்படையில், ஊரக வளர்ச்சி இயக்குநர் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 30,000 பெண்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிப்பதற்கான கருத்துருவினை அரசிற்கு அனுப்பியுள்ளார். அதன்படி இப்பயிற்சிக்கு ஒரு நபருக்கு ஆகும் செலவு பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| ஒரு நாள் பயிற்சிக்கான உதவித் தொகை | : | ரூ.40 |
| ஒரு பயிற்சி பெறுபவருக்கான ஒரு நாள் பயிற்சிக் கட்டணம் | : | ரூ.15 |
| பயிற்சி பெறுபவருக்கான கருவிக்கலப் பெட்டியின் மதிப்பு | : | ரூ.15 |
| மொத்தம் | : | ரூ.70 |

அதே போல 30,000 பெண்களுக்கான தொழில் முனைவோர் பயிற்சிக்கான மொத்த செலவு பின்வருமாறு உள்ளது.

**7 நாள் பயிற்சிக்கு ஆகும் மொத்தச் செலவு**

| | | | |
|---|---|---|---|
| பயிற்சி பெறுபவர்களுக்கு உதவித் தொகை செலவு | 30000X40X7 | = | ரூ.84.00 (இலட்சம்) |
| பயிற்சி நிலையத்திற்கான செலவு | 30000X15X7 | = | ரூ.31.50 (இலட்சம்) |
| மற்ற செலவுகள் | 3000X15 | = | ரூ.0.45 (இலட்சம்) |
| மொத்தச் செலவு | | = | ரூ.115.95 (இலட்சம்) |

ஊரக வளர்ச்சி இயக்குநர் மேலும், தனது கருத்துருவில் அக்டோபர் 2001 வரை மாவட்டங்களின் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டக் கணக்கில் ரூ.361.740 இலட்சங்கள் உள்ளது என்றும் இத்தொகையில் இருந்து 30,000 பெண்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சிஅளிப்பதற்கு ஆகும் தொகையான சுமார் ரூ.115.95 இலட்சங்களை செலவிடலாம் எனவும், இப்பயிற்சிக்காக அரசு கூடுதல் நிதி எதுவும் விடுவிக்க வேண்டியதில்லை எனவும் தெரிவித்துள்ளார். இப்பயிற்சியை நடத்துவதற்கான அனுமதியினை வழங்கி ஆணையிட்டால் போதும் என அரசைக் கோரியுள்ளார்.

**3.** அரசு, ஊரக வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவை கவனமாக பரிசீலனை செய்து ஊரக வளர்ச்சி இயக்குநரின் கோரிக்கையை ஏற்று மேலே பத்தி 2–ல் தெரிவித்துள்ளது போல் இந்த ஆண்டில் 30,000 பெண்களுக்கான தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கவும், இதற்கு ஆகும் செலவினை மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டக் கணக்கில் உள்ள நிதியிலிருந்து செலவழிக்க ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதி வழங்கி ஆணையிடுகிறது.

**4.** இவ்வாணை திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை மற்றும் நிதித்துறை அ.சா.எண்கள் முறையே அ.சா.கு.எண்கள்.9679/சி.எஸ்./2001–1, நாள்.31.10.2001 மற்றும் அ.சா.கு.எண்.88071/ஊ.வ./ 2001–1, நாள்.20.12.2001 இசைவுகளுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எல்.என்.விஜயராகவன்**
அரசு செயலாளர்